VNR9T

விருதுநகர் மாவட்டம்

www.Padasalai.Net முழு ஆண்டுத் தேர்வு - 2024 www.Trb Tnpsc.com

-----

வகுப்பு 9

தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம்

மதிப்பெண்கள்: 100

பகுதி -I (மதிப்பெண்கள் - 15)

15×1=15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) இந்திய நாடு, மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர் ..........

அ) குமரிலபட்டர் ஆ) ச.அகத்தியலிங்கம்

இ) ஹீரஸ் பாதிரியார் ஈ) மாக்ஸ் முல்லர்

2) 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

3) பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் தொடர் .........

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

4) பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்

எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்

இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்

அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

5) பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்

ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்

இ) சீவகசிந்தாமணி - 3. அற இலக்கியம்

ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

அ) அ - 3, ஆ - 4, இ - 1, ஈ - 2 ஆ) அ - 2, ஆ - 3, இ - 1, ஈ - 4

இ) அ - 3, ஆ - 1, இ - 4, ஈ - 2 ஈ) அ - 4, ஆ - 1, இ - 2, ஈ - 3

6) தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை .........

அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்

இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

7) இந்திய தேசிய இராணுவத்தை ........... இன் தலைமையில் ........... உருவாக்கினார்.

அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்

இ) மோகன் சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

8) பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத் தொகை

ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை

ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத் தொகை

9) பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ............

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி

இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

10) மரவேர் என்பது ............. புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

11) 'வகுப்பறை சிரித்தது!' என்பது ............. ஆகுபெயராகும்.

அ) காலவாகுபெயர் ஆ) பொருளாகுபெயர்

இ) இடவாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர்

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

தன்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏற்றுமின்;

12) இப்பாடல் இடம்பெறும் நூல் ..........
அ) இராவணகாவியம் ஆ) மணிமேகலை
இ) பெரியபுராணம் ஈ) புறநானூறு

13) இப்பாடலின் ஆசிரியர் ............
அ) புலவர் குழந்தை ஆ) திருத்தக்கத் தேவர்
இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) சேக்கிழார்

14) இப்பாடலில் வரும் அடி எதுகைச் சொற்களை எழுதுக.
அ) தன்மணற், புண்ணிய ஆ) பந்தரும், நல்லுரை
இ) பொருந்துமின், ஏறுமின் ஈ) அறிவீர், உறுபொருள்

15) இப்பாடலில் வரும் சீர்மோனைச் சொற்களை எழுதுக.
அ) பந்தரும், புண்ணிய ஆ) பந்தரும், பட்டிமண்டபத்துப்
இ) பந்தரும், பாங்கறிந்து ஈ) பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து

## பகுதி -II

### பிரிவு -1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8**
**21-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்**

16) **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க**
அ) வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் 'ஒரு சிறு இசை' ஆகும்.
ஆ) சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார்

17) நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

18) இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?

19) யாசோதர காவியம் - குறிப்புத் தருக.

20) இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

21) 'தரும்' - என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு -2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.**
அ) சித்திரமும் கைப்பழக்கம் .............
ஆ) கற்றோர்க்குச் சென்ற ...............

23) சரிந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) நேற்று தென்றல் காற்று அடித்தது.
ஆ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா

25) **தொடர் தரும் பொருளைக் கூறுக.**
பொய்ச்சொல், பொய்சொல்

26) நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன்.-இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

27) **அகராதியில் காண்க.**
அ) இசைவு - ஆ) கம்புள் -

28) **கலைச்சொற்கள் தருக.**
அ) Indian National Army ஆ) Water management

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net பகுதி -III www.Trb Tnpsc.com

பிரிவு -1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2×3=6

29) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

'நீரின்று அமையாது உலகம்' என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார் திருவள்ளுவர்.

ஒவ்வோர் ஆண்டும் பெய்கின்ற மழையின் அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். ஆனால், மழை வழங்கிய நீரை இத்தகைய நீர்நிலைகளே பாதுகாத்துத் தருகின்றன.

மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

அ) ஒவ்வோர் ஆண்டும் பெய்கின்ற மழைநீரைப் பாதுகாத்துத் தருவன எவை?

ஆ) 'நீரின்று அமையாது உலகம்' என்ற கருத்தைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளவர் யார்?

இ) பயிர்க் கூட்டமும் உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிவது எது?

30) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

31) சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

பிரிவு -2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2×3=6

**34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

33) 'யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

34) **அடிபிறழாமல் எழுதுக.**

அ) 'ஒன்றறி வதுவே .......... எனத் தொடங்கும் உயிர்வகைப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) கல்வியைப் பிறந்த ........ எனத் தொடங்கும் 'இராவண காவியம்' பாடலை எழுதுக.

பிரிவு -3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 2×3=6

35) வல்லினம் மிகும் இடங்களுக்கு மூன்று எடுத்துக்காட்டு தருக.

36) அ) 'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண் - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

37) 'அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தோர்
குன்றுவ செய்தல் இலர்' - இக்குறட்பாவினை அலகிட்டு, வாய்பாடு தருக.

பகுதி -IV (மதிப்பெண்கள் - 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

39) அ) சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.


**(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் - தமிழ் - ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவு அஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) பாநயம் பாராட்டுக.

'திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே
\- குமரகுருபரர்.

42) அ) மொழிபெயர்க்க.

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

(அல்லது)

ஆ) உன் வாழ்வில் உன்னை மகிழச் செய்த பணிகள் ஐந்தினை எழுதுக.

## பகுதி - V (மதிப்பெண்கள் - 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3×8=24

43) அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45) அ) நீங்கள் விரும்பிய படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும். உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

\- - - - - -

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com